27th March 1969]

Burma Refugees' Quarters

* 238 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether the Burma Refugees, who occupy quarters in Survey No. 121 of Padiyanallur village in Cholapuram firka in Ponneri taluk of Chingleput district were evicted on 8th October 1968; and

(b) if so, the reason therefor?

பர்மா அகதிகள் குடியிருப்பு

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 அக்டோபர் 8-ம் தேதி செங்கற்பட்டு மாவட்ட பொன்னேரி தாலுக்கா சோழபுரம் பிர்க்கா பாடிய நல்லூர் கிராமம் சர்வே எண். 121-ல் புறம்போக்கு இடத்தில் பர்மா அகதிகள் குடியிருப்புகள் அத்தனையும் காலி செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இந்தப் பகுதியில் ஆக்ரமிப்பு செய்த சுமார் 1,000 அகதிகளில் 4 பேர்கள் மட்டுமே அகற்றப் பட்டனர்.

(இ) பாடியநல்லூர் சர்வே எண். 121-ல் பகுதியில் அமைந்துள்ள தற்காலிக முகாமின் எல்லைகளுக்குள் இந்த நாலு பேர்கள் ஆக்ரமிப்பு செய்தனர். இந்தத் தற்காலிக முகாமுக்கு செங்குன்றத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் குழாய்கள் வரை மேற்படி வெளிவியவர்கள் குடிசைகளைக் கட்டிக் கொண்டதால் இந்தக் குழாய்கள் ஆபத்தான நிலைமையை அடைந்தன. அதனால் இந்த நாலு பேர்கள் அவ்விடத்தி லிருந்து அகற்றப்பட்டனர்.

A.D.T. 27 Paddy

* 239 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) the acreage cultivated with A.D.T. 27 variety of paddy in Thanjavur district and other places in Tamil Nadu during 1966 and 1967; and

(b) the reason for the inability to bring a larger area under its cultivation?

ஏ. டி. டி. 27 நெல்

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966–67-ம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் தஞ்சை மாவட்டத்திலும் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் ஏ.டி.டி. 27 நெல் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டது ?

(இ) அதிகம் பயிர் செய்ய இயலாமைக்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ), (இ) மேலவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Prices of rice, oil, etc.

— *240 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the reason for the increase in prices of rice, oils and dhall in September 1968 all over Tamil Nadu?

அரிசி, எண்ணெ, பருப்பு, விலைகள்

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

1968 செப்டம்பரில் தமிழகமெங்கும் அரிசி, எண்ணெ, பருப்பு விலைகள் கூடிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழ்நாட்டில் 1968 செப்டம்பரில் அரிசி விலை உயர்வுக்குக் குறுவை அறுவடை தாமதமானதே காரணமாகும். இம் மாநிலத்தில் 1968 செப்டம்பர் திங்களில் கடலை எண்ணெயின் தற்காலிக விலை ஏற்றத்திற்குக் குஜராத்தின் பெருவெள்ளமும் அதன் விளைவாகப் பயிர் விளைவு பாதிக்கப்படுமோ என்ற அச்சமுமே காரணமாகும். கடலை எண்ணெயின் விலைகளின் ஏற்றத்திற்கு ஒத்தவாறே நல்லெண்ணெய் விலையும் உயர்ந்தது. தேங்காய் எண்ணெயைப் பொறுத்தவரை பம்பாய் ஆலை உரிமையாளர்கள் கொப்பரைத் தேங்காய்களை அதிக அளவில் கேரளாவிலிருந்து வாங்கியதன் காரணமாக ஆலப்புழையில் அவற்றின் விலைகள் உயர்ந்தன. இம்மாநிலம் தேங்காய் எண்ணெய்க்குக் கேரளாவையே பெரிதும் நம்பி இருப்பதால், இம்மாநிலத்தில் தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்தது. வெள்ளத்தின் காரணமாக வட நாட்டுப் பகுதிகளிலிருந்து பருப்பு வருவது தாமதித்ததாலும் குறைந்த அளவே வந்தமையாலும் தமிழ்நாட்டில் 1968 செப்டம்பரில் பருப்பு விலை உயர்ந்தது.

Andipatti Local Fund Hospital

*241 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Tamil Nadu Government are going to take over the Andipatti Local Fund Hospital in Madurai district; and

(b) the date from which this Hospital will function as a Government Hospital?

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிப்பு மருத்துவமனை

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட ஆண்டிப்பட்டி லோக்கல் பண்ட் மருத்துவ மனையை தமிழக அரசு ஏற்கவிருக்கிறதா ?

(இ) இது எப்பொழுதிலிருந்து அரசு மருத்துவ மனையாக செயல் படும் ?

* Printed as Appendix I on page 135.